**தக்காளி விலை உயர்வு**

வெள்ளக்கோவில், மே 15: வெள்ளக்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாரச் சந்தையில் தக்காளி விலை உயர்ந்து காணப்பட்டது. கடந்த வாரத்தை விட கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்த்தப்பட்டு, 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

÷மற்ற காய்கறிகளின் விற்பனை விலை நிலவரம் (கிலோவுக்கு): கத்தரி, பீர்க்கன், புடலை, பீட்ரூட், பாகற்காய்- ரூ. 20, வெண்டைக்காய்-ரூ. 30, முட்டை கோஸ், கேரட், பீன்ஸ்- ரூ. 15, சின்ன வெங்காயம்- ரூ. 25, பெரிய வெங்காயம்- ரூ. 12. கடந்த வாரத்தை விட முருங்கை காய் வரத்து குறைந்திருந்தாலும், விலை அதிகரிக்காமல் காய் ஒரு ரூபாய்க்கு விற்பனையானது.

---

**கோடை மழை பயன்படுத்தி பாசிப்பயறு விதைப்பு: வேளாண் அதிகாரி தகவல்**

நாமக்கல்: "கோடை மழையை பயன்படுத்தி, குறுகியகால பயிரான பாசிப்பயறு விதைப்பு செய்து பயன்பெறலாம்' என, புதுச்சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தற்போது, புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி, குறுகியகால பயிரான பாசிப்பயறு விதைப்பு செய்து பயன்பெறலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு எட்டு கிலோ பாசிப்பயறு விதை போதுமானது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு தழைச்சத்தாக, 10 கிலோ யூரியாவும், மணிச்சத்தாக, 20 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், சாம்பல் சத்தாக, 17 கிலோ பொட்டாஷ் அடியுரமாக கடைசி உழவின்போது இடவேண்டும். மேலும், இரண்டு கிலோ பயறுவகை நுண்ணூட்ட சத்தை விதைப்பதற்கு முன் சீராக தூவ வேண்டும். ஒரு கிலோ விதைக்கு, கார்பன்டாசிம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி நான்கு கிராம் அல்லது

சூடோமோனாஸ் ப்ளுரசன்ஸ் பத்து கிராம் கலந்து விதைப்பு செய்யலாம். விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன் ரைசோபியம் பயறு, பாஸ்போ பாக்டீரியா, 200 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். அவ்வாறு செய்வதால் விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்தலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு பென்டிமெத்திலின், 800 மில்லி விதைத்த மூன்றாவது நாள், 20 கிலோ மணலுடன் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது சீராக தூவ வேண்டும். மேலும், விதைத்த, 25வது நாள் கைக்களை எடுக்கவும். அதனால், பயிரின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. அதிக, மகசூல் பெற விதைத்த, 25 மற்றும் 40வது நாட்களில் இரண்டு சத டிஏபி கரைசல் கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேலைகளில் தெளிப்பதால், பூ அதிகம் உற்பத்தியாகி காய்பிடித்து மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**மஞ்சள் விலை குவிண்டால் ரூ. 1,000 சரிவு:விவசாயிகள் மத்தியில் விரக்தி**

ஈரோடு: ஈரோட்டில் இரண்டு வாரங்களாக மஞ்சள் விலை, குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வரை சரிவை சந்தித்துள்ளது. டெண்டரில் இருந்து விலகி, மூட்டைகளை விவசாயிகள் திரும்ப எடுத்துச் செல்கின்றனர்.

ஈரோட்டில், அரசுக்கு சொந்தமான மூன்று மஞ்சள் மார்க்கெட்கள், வியாபாரிகளின் வெளிமார்க்கெட் ஆகியவற்றில், டெண்டர் மூலமாக மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது. இவற்றுக்கு, நாள்தோறும் 6,000 குவிண்டால் வரை மஞ்சள் வரத்தாகிறது.

விரலி, கிழங்கு, தாய்க்கிழங்கு மற்றும் பி.டி.எஸ்.-10 (சேலம் ரகம்) மஞ்சள் அதிகளவில் விற்பனைக்கு வருகிறது. 2010 டிசம்பர் மாதம் மஞ்சள் விலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, குவிண்டால் 18 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. இதனால், மஞ்சள் சாகுபடி பரப்பு அதிகரித்தது. நடப்பாண்டு ஜனவரியில் இருந்து, மஞ்சள் வரத்து இரண்டு மடங்கு அதிகரித்தது.

சில வாரங்களிலேயே மஞ்சள் விலை சரியத் துவங்கியது. 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்ட மஞ்சள் தற்போது, மஞ்சள் 10 ஆயிரத்துக்கும் குறைவாக விலைபோகிறது. சென்ற வாரம், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி குவிண்டால் 10,949 ரூபாய்,

கிழங்கு 10,109 ரூபாய், வெளிச்சந்தையில், விரலி 10,769 ரூபாய், கிழங்கு 10,265 ரூபாய், ஈரோடு சொசைட்டியில் விரலி 11,311 ரூபாய், கிழங்கு 10,037 ரூபாய்க்கு விற்பனையானது.

இரண்டு நாள் விடுமுறைக்கு பின், நேற்று ஈரோடு சொசைட்டியில் 1,325 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. விரலி 7, 855 முதல் 9,091 ரூபாய், கிழங்கு 7, 603 முதல் 8,425 ரூபாய் வரை விற்பனையானது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 1,302 மூட்டை வரத்தானது. விரலி 8,611 முதல் 9,095 ரூபாய், கிழங்கு 7,979 முதல் 8,383 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதே நிலைதான் வெளிச்சந்தை மற்றும் கோபி சொசைட்டியிலும் நிலவியது. கடந்த வாரத்தை விட 800 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை விலை சரிந்துள்ளது.

மார்க்கெட்டுக்கு மஞ்சள் கொண்டு வந்த விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். விலை சரிவு வரும் வாரங்களிலும் தொடரும் என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விலை தொடர் சரிவால், சில விவசாயிகள் கையிருப்பில் உள்ள மஞ்சளை கிடைக்கும் விலைக்கு விற்க முயற்சிக்கின்றனர். மூட்டைகளை நாள் கணக்கில் இருப்பு வைப்பதால் ஏற்படும் இழப்பு, திருப்பி எடுத்துச்செல்வதால் ஏற்படும் வாகன வாடகை செலவு ஆகியவற்றை கணக்கில் கொண்டு, கிடைக்கும் விலைக்கு விற்று விடுகின்றனர்.

இன்னும் சிலர், நல்ல விலை வரும் வரை காத்திருக்க முடிவு செய்து, மஞ்சள் மூட்டைகளை திருப்பி எடுத்துச் செல்கின்றனர்.

---

**ஈரோட்டுக்கு மாங்காய் வரத்து கணிசமாக உயர்வு**

ஈரோடு: ஈரோட்டுக்கு மாங்காய் வரத்து கணிசமாக அதிகரித்து வருகிறது.நடப்பாண்டு மா விளைச்சல் 70 சதவீதம் அதிகரித்துள்ளது. ஈரோடு மார்க்கெட்டுக்கு தினசரி மாங்காய் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.ஈரோடு மா மண்டியிலுள்ள நான்கு குடோன்களில் புகை மூலம் காயை பழுக்க வைக்கும் பணியில் வியாபாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.வரத்து அதிகரித்துள்ள நிலையில் மாம்பழம் ரகத்துக்கேற்ப கிலோ 10 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.ஈரோடு தமிழர் வணிகர் சங்கம்

மாவட்ட செயலாளர் சண்முகவேல் கூறியதாவது:
குண்டு, இமாம் சந்த், மல்கோவா மாம்பழங்கள் கிலோ 40 ரூபாய்க்கும், பெங்களூரா மற்றும் நடுச்சாலை கிலோ தலா 10 ரூபாய்க்கும் மொத்த விலையில் விற்கப்படுகிறது. தற்போது, கோடை வெயில் தாக்கத்தால் விற்பனையில் ஜரூராக நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

---

**மாங்காய் வரத்து அதிகரிப்பு வட மாநிலங்களுக்கு சப்ளை**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சந்தைக்கு மாங்காய் வரத்து அதிகரித்துள்ளதால், வட மாநிலங்களுக்கு அதிகளவு அனுப்பப்படுகிறது. பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை, சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர், ஒடையக்குளம், கோமங்கலம் உட்பட சுற்றுப்பகுதிகளில், மார்ச் மாத இறுதியில் துவங்கும் மாங்காய் சீசன், ஜூன் வரை நீடிக்கும். தற்போது, விளைச்சல் அபரிமிதமாக உள்ளதால், கடந்த மாதத்தை விட, சந்தை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், கேரளா மற்றும் வட மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. கேரளா, சித்தூர், கிருஷ்ணகிரி பகுதிகளுக்கு, தினமும் 10 டன், வட மாநிலமான அகமதாபாத்திற்கு 20 டன் வீதம், பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. மொத்த மார்க்கெட் விலை நிலவரம் (கிலோ): அல்போன்சா ரகம் 22-23, செந்தூரம் 6-10, கிளி மூக்கு மாங்காய் 5.50, மல்கோவா 25-30, நாட்டு ரகம் 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

---

**குன்னூர் தேயிலை ஏலத்தில் ஏறுமுகம்**

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகத்தில் ஏறுமுகம் தென்பட்டது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 19க்கான ஏலம் நடந்தது. இலை ரகம் 10.66 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.63 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், வழக்கமாக

பங்கெடுக்கும் பாகிஸ்தான், ரஷ்யா, அமெரிக்கா, மேற்காசிய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரம் ஓரளவு இருந்தது. கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் வழக்கம் போல் குறைவாக இருந்தது. அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 3 ரூபாய் சரிந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 20 சதவீதம் தேங்கியது.

சி.டி.சி., ரக விற்பனையில் அதிகபட்சம் கிலோவுக்கு 151 ரூபாய் விலை கிடைத்தது; 70க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் கிலோவுக்கு 193 ரூபாய் விலை கிடைத்தது; 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 42 - 44, சிறந்த ரக தூளுக்கு 80 - 128 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 46-48, சிறந்த ரக தூளுக்கு 85 - 135 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 17க்கான ஏலம் வரும் 20,21 தேதிகளில் நடக்கவுள்ளது. மொத்தம் 15.12 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள்ளது. இலை ரகம் 10.76 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 4.36 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 18 ஆயிரம் கிலோ குறைவாகும்.

---

**விவசாயத்துறையில் முறைகேடாக நடக்கும் இடுபொருள் விற்பனை**

தேனி : விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு வழங்க உரங்கள் உட்பட ஏராளமான இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இந்த இடுபொருட்களை தகுதியான விவசாயிகளுக்கு கொடுக்காமல், கொடுத்தது போல் ஆவணங்களை தயாரித்து விட்டு

வெளிமார்க்கெட்டில் லாபத்திற்கு விற்பனை செய்து விடுகின்றனர். பழக்கன்றுகள், நாற்றுகளுக்கும் இதே நிலை தான். கேரள எல்லையோரம் உள்ள மாவட்டங்களில் இந்த இடுபொருட்கள் அம்மாநில விவசாயிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆட்சியில் இந்த முறைகேடு நடந்தாலும் இதுபற்றி யாரும் கண்டுகொள்ளவில்லை. இதனால் தமிழக விவசாயிகளுக்கு அரசு வழங்கி வந்த மானியம், மற்ற மாநில விவசாயிகளுக்கும், வெளிமார்க்கெட் வியாபாரிகளுக்கும் சென்று சேர்ந்தது. விவசாயிகள் இது பற்றி புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு விவசாயத்துறையில் உள்ள குறைபாடுகளை களைந்து, அரசு வழங்கும் மானிய உதவிகள் முழுக்க தங்களுக்கு கிடைக்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும், என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

---

**பல மாதங்களாகியும் வராத பயிர் காப்பீடு தொகை**

முதுகுளத்தூர் : இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல மாதங்களாகியும், பயிர் காப்பீட்டு தொகை வழங்காததால், கவலையில் உள்ளனர். இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட பயிர் பாதிப்பிற்கு மத்திய, மாநில அரசுகள் தலா பாதி சதவீதம் நிவாரண தொகைகளை பங்கிட்டு விவசாயிகளுக்கு வழங்குகின்றது. கடந்த ஆண்டுக்குரிய நிவாரண தொகை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வழங்கப்பட்டும் பல மாதங்களாகியும் விவசாயிகளுக்கு வழங்கபடவில்லை. இதனால் கோடை சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். கூட்டுறவு வங்கி அதிகாரி ஒருவர் கூறியதாவது: இழப்பீட்டு தொகை பதிவு செய்த விவசாயிகளின் கணக்கில் சம்மந்தபட்ட வங்கிகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது, என்றார்.

---

*பருவம் மாறி பெய்த மழை:*

*பீன்ஸ் பயிரை நோய் தாக்கியதால் விவசாயிகள் கவலை*

*கொலக்கம்பை, மே.17–*
*கொலக்கம்பை பகுதியில் பீன்ஸ் செடிகள் மழையினால் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*
*விவசாயம்*
*கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான டெராமியா, கெரடாலீஸ், தூதூர்மட்டம், சட்டன், கிளிஞ்சடா, கரும்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக படியான மலை தோட்ட காய்கறி விவசாய நிலங்கள் உள்ளது. இதில் பெரும்பாலான விவசாயிகள் மலை தோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ் பயிரை விவசாயம் செய்து வருகின்றனர். இந்த பீன்ஸ் பயிரை விவசாயம் செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர்.*
*கடந்த சில வாரங்களுக்கு பருவம் மாறி பெய்த மழை யினால் இந்த பீன்ஸ் பயிர் நோய் தாக்கி உள்ளது. இத னால் விவசாயிகள் பாதிப்புக் குள்ளாகி உள்ளனர்.*
*ஆலோசனை*
*இது குறித்து அந்த பகுதியை சேர்ந்த விவசாயி நந்தகுமார் மற்றும் சில விவசாயிகள் கூறியதாவது:–*
*நீலகிரி மாவட்டத்தின் பணப்பயிராக விளங்கி வந்த பச்சை தேயிலைக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் இதனை நம்பி இருந்த விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக் கடியில் சிக்கி தவித்தோம். அப்போது மலை தோட்ட காய்கறி பயிர்களை மாற்றுப் பயிராக விவசாயம் செய்ய தோட்டக்கலை துறையினர் ஆலோசனை வழங்கினார்கள்.இதன்படி சிலர் தங்களது தேயிலை தோட்டங்களில் தேயிலை செடிகளை கவாத்து செய்து, அதனிடையே மலை தோட்ட காய்கறி பயிர்களை விவசாயம் செய்தோம். மேலும் சிலர் கொய்மலர் சாகுபடியும் செய்தனர்.*
*பின்ஸ் பயிர்*
*இதில் பீன்ஸ் பயிருக்கு போதிய விலை கிடைத்து வருகிறது. ஜனவரி மாதம் பயிர் செய்து, ஏப்ரல்,மே மாதங்களில் பீன்ஸ் அறுவடைக்கு தயாராகி விடும். அவற்றை அறுவடை செய்து, மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறோம். இதனை திருச்சி, மதுரை, சென்னை மேலும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பகுதி களில் இருந்து வியாபாரிகள் மொத்தமாக வந்து வாங்கி சென்று வருகின்றனர்.*
*இந்த வருடம் ஜனவரி மாதங்களில் மழை இல்லாமல் விவசாய நிலங்கள் வறண்டு காணப்பட்டன. நீரோடை களின் மூலம் சென்ற குறைந்த அளவு தண்ணீரை கொண்டு பீன்ஸ் செடியை அறுவடைக்கு தயார்படுத்தினோம்.*
*மழையினால் சேதம்*
*கடந்த சில வாரங்களுக்கு முன்பு பருவம் மாறி பெய்த பலத்த மழையினால் தாழ் வான பகுதிகளில் பயிர் செய்யப்பட்ட விவசாய நிலங் களுக்குள் மழைநீர் தேங்கின. இதனால் பீன்ஸ் பயிர்கள் பாதி சேதம் அடைந்தது.*
*மேலும் பெரும்பாலான பீன்ஸ் விவசாய நிலங்களில் பயிர் செய்யப்பட்டு இருந்த பீன்ஸ் செடிகளில் நோய் தாக்கி உள்ளது. இதனால் போதிய அளவு மகசூல் இருந்தும், பீன்ஸ்*

பயிருக்கு மேட்டுப்பாளையம் காய்கறி மண்டியில் போதிய அளவு விலை கிடைக்கவில்லை. இதற்கு முக்கிய காரணம் பீன்ஸ் பயிரை நோய் தாக்கியது தான். மேலும் தோட்டக்கலை துறையினர் மலை தோட்ட காய்கறிகள் பட்டியலில் பீன்ஸ் பயிர் இடம்பெறவில்லை என கூறி உள்ளனர். இதனை தளர்த்தி அதிகாரிகள் ஆய்வு நடத்தி, கொலக்கம்பை பகுதி யில் மழையால் பாதிக்கப்பட்ட பீன்ஸ் விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

---

## கோவை மாவட்டத்தில், பட்டு வளர்ப்பு தொழிலில்ஆர்வம்:

## 400 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் மல்பரி சாகுபடி

## உதவி இயக்குனர் சந்திரசேகரன் தகவல்

கோவை,மே.17–
கோவை மாவட்டத்தில், பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் கூடுதலாக 400 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்யப்படுகிறது என்று பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சந்திரசேகரன் கூறினார்.
வரத்து அதிகரிப்பு
கோவை பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் தினசரி பட்டுக்கூடு விற்பனை ஏல மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு அவினாசி, அன்னூர், வெள்ளக்கோவில், திண்டுக்கல், பழனி, தேனி, புதுக்கோட்டை, உடுமலை, குடிமங்கலம், கொடுமுடி, பெருந்துறை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்தும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் வெண்பட்டுக்கூடுகளை கொண்டுவந்து விற்பனை செய்து வருகின்றனர்.
கோவை மார்க்கெட்டுக்கு மஞ்சள், வெள்ளை நிற பட்டுக்கூடுகளை விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். தற்போது வெள்ளை நிற பட்டுக்கூடுகளுக்கு மவுசு கூடி உள்ளதால் பெரும்பாலும் வெண்பட்டுக்கூடுகளின் வரத்துதான் அதிகரித்து உள்ளது. மாதந்தோறும் 35 ஆயிரம் கிலோ வரை பட்டுக்கூடுகள் வருகின்றன.
இருமடங்கு விலை
இங்கு ஏலம் போகும் பட்டுக்கூடுகளை சர்வோதய சங்கத்தினர், மற்றும் தனியார் வியாபாரிகள் வந்து வாங்கி செல்கின்றனர். தற்போது சீனாவில் இருந்து கிடைக்கும் பட்டுநூல் விலையை விட, உள்நாட்டில் பட்டு நூல் விலை குறைவாக கிடைக்கிறது. இதனால் உள்நாட்டு தேவைக்கு அதிக அளவில் பட்டுக்கூடுகள் பயன்படுத்தப்படுகிறது.
இதன் காரணமாக சமீபகாலமாக பட்டுக்கூடுகளின் விலை இருமடங்கு அதிகரித்து உள்ளது. விலை உயர்வு காரணமாக கூடுதல் பரப்பளவில் பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான மல்பரி செடிகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.
இதுகுறித்து கோவை பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குனர் சந்திர சேகரன் கூறியதாவது:–
400 ஏக்கர் பரப்பளவு
கோவை பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குனர் அலுவலகத்துக்கு உட்பட்டு அன்னூர், அவினாசி, பெரியநாயக்கன்பாளையணம், கோவை பகுதிகள் உள்ளன. இந்த இடங்களில் பட்டுவளர்ச்சிக்கான தொழில்நுட்ப மையங்கள் செயல்படுகின்றன. இந்த மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சிக்கான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த கட்டமாக கிராமங்களுக்கு நேரடியாக சென்று முகாம்கள் நடத்தப்பட்டு, பட்டுக்கூடு தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது. கோவை பகுதியில்

*332 பட்டு விவசாயிகள் உள்ளனர். இந்த பகுதிகளில் ஏற்கனவே 565 ஏக்கரில் மல்பரி சாகுபடி உள்ளது. இது தவிர இந்த ஆண்டு கூடுதலாக 400 பரப்பளவுக்கு மல்பரி சாகுபடியை அதிகரிக்க அதற்கான நர்சரி பண்ணைகளில் மல்பரி நாற்றுகள் வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது.*

*விவசாயிகள் ஆர்வம்*

*ஒரு ஏக்கருக்கு 5400 மல்பரி நாற்றுகள் நடமுடியும். நட்ட 3 வது மாதத்தில் இருந்து இலைகளை பறிக்க முடியும். ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி மூலம், அதைக்கொண்டு வளர்க்கப்படும் பட்டுப்புழுக்கள் மூலம் ஆண்டுக்கு 840 பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்ய முடியும்.*

*தற்போது கடந்த காலத்தைவிட கோவை மாவட்டத்தில், மாவுப்பூச்சிகளின் தாக்குதல் முழுமையாக குறைந்துள்ளது. மாவுப்பூச்சியின்தாக்கம் இருந்தால், அதை ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு, ஒட்டுண்ணிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

*மேலும் வெண்பட்டுக்கூடுகள் கிலோ ஒன்றுக்கு ரூ.250 வரை விற்பனை ஆகிறது. இந்த விலை நிலையாக காணப்படுவதால் பட்டுவளர்ப்பு தொழிலில் ஈடுபட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளனர். இதனால் வருகிற நவம்பர் மாத இறுதிக்குள் கூடுதலாக 400 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்ய வாய்ப்புகள் உள்ளன.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

---

## சிறுவாணி நீர்மட்டம் குறைந்தாலும் நிலைமையை சமாளிக்கலாம்

## தென்மேற்கு பருவமழை மாத கடைசியில் தொடங்கும்வாய்ப்பு

*கோவை,மே.17–*

*தென் மேற்கு பருவமழை இந்த மாதம் கடைசியில் தொடங்கும் வாய்ப்பு இருப்பதால், சிறுவாணி நீர்மட்டம் குறைந்தாலும் நிலைமையை சமாளிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*சிறுவாணி நீர்மட்டம்*

*கோவைக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணியின் மொத்த நீர்மட்டம் 878.50 மீட்டர் ஆகும். கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் அணை நிரம்பவில்லை. இருந்தாலும் சிறுவாணியில் போதிய தண்ணீர் இருந்ததால், நிலைமையை சமாளிக்க முடிந்தது. கோடை காலம் தொடங்கிய நிலையில் சிறுவாணியில் தண்ணீர் மட்டம் மள,மள என்று குறைந்தது. தினமும் 10 சென்டிமீட்டர் அளவுக்கு தண்ணீர் குறைந்து வந்தது. கடந்த 2 வாரத்துக்கு முன்பு கோவை மாவட்டம் முழுவதும் கோடை மழை பெய்தது. சிறுவாணி அணை பகுதியிலும் மழை பெய்தது. இந்த மழையினால் நீர்மட்டம் உயராவிட்டாலும், நீர்மட்டம் ஒருவார காலத்துக்கு குறையாத நிலைமைக்கு வாய்ப்பளித்தது.*

*சிறுவாணியில் நேற்றைய நீர்மட்டம் 865.12 மீட்டராகும். அணையில் இருந்து 863.4 மீட்டர்வரை நீரை எடுக்க முடியும்.*

*நிலைமையை சமாளிக்கலாம்*

*இதுகுறித்து சிறுவாணி குடிநீர் வடிகால்வாரிய அதிகாரிகள் கூறும்போது, சிறுவாணி அணையில் இருந்து தினமும் 65 எம்.எல்.டி.(6½ கோடி லிட்டர்) தண்ணீர் எடுக்கப்படுகிறது. இதில் நகர்ப்புற பகுதிகளுக்கு 1 கோடியே 30 லட்சம் லிட்டரும், கோவை நகர பகுதிகளுக்கு 5 கோடியே 20 லட்சம் லிட்டரும் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.*

*இந்த மாத கடைசிவரை சிறுவாணியில் இருந்து குடிநீரை எடுக்க முடியும் என்பதால்*

தென்மேற்கு பருவமழை தொடங்கும்வரை பிரச்சினை இருக்காது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்மேற்கு பருவமழை

கேரளாவின் மழை காலமான தென்மேற்கு பருவமழை காலம் மே மாத கடைசியில் அல்லது ஜூன் மாதம் ஆரம்பத்தில் வழக்கமாக தொடங்கும். இந்த மழையின்போதுதான் சிறுவாணி அணைப்பகுதியில் மழை பெய்து அணை நிரம்பும். எனவே தென்மேற்கு பருவமழை இந்த மாத கடைசியில் தொடங்கும் வாய்ப்பு உள்ளது.

கோவையில் சிறுவாணி குடிநீர் வினியோகம் செய்யும் பகுதிகளில் 4 நாட்களுக்கு ஒருமுறையும், பில்லூர் குடிநீர் வினியோகம் செய்யும் பகுதிகளில் 8 நாட்களுக்கு ஒருமுறையும் குடிநீர் வினியோகம் செ சய்யப்படுகிறது. கோவையில் குடிநீர் பிரச்சினை நிலவி வருகிறது. இருந்தாலும் நிலைமைய ஓரளவு சமாளிக்கப்பட்டு வருவதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பில்லூர் 2–வது கட்டம்

பில்லூர் 2–வது கட்ட குடிநீர் திட்டப்பணிகள் இன்னும் முடிவடையவில்லை. இந்த பணிகள் முழுவதும் முடிவடைய இன்னும் 3 மாதங்கள் ஆகும் என்று தெரிகிறது. இதற்கிடையில் பில்லூர் முதலாவது திட்டத்தில் இருந்து 2–வது கட்டபணிகளுக்கு பதிக்கப்பட்ட குழாய்கள் மூலம் அதிகப்படியான குடிநீரை வினியோகம் செய்யும் பணியும் இன்னும் முடிவடையவில்லை. இதனால் பில்லூர் குடிநீர் வினியோகம் செய்யும் பகுதிகளில் பொதுமக்கள் குடிநீருக்கு சிரமப்படும் நிலைமை உள்ளது.